**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண். 98/2009**

நாள்: 12.03.2026.

பெயர்: சதாசிவம் (வா.சா.1) த/பெ: ஆதிமூலம்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**<u>2 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>...**

எனது தாத்தா பெயர் அய்யாகண்ணு, அவரது குழந்தைகள் 1. வடமலை, 2. கலியன், 3. ஆறுமுகம், 4. சாமிகண்ணு, 5. ஆதிமூலம். நான் ஆதிமூலத்தின் மகன். சாமிகண்ணு எனது பெரியப்பா, மேற்படி சாமிகண்ணு கடந்த 25.01.1945 ம் தேதியில் பொன்னுசாமி படையாச்சி மகன்கள் பூராசாமி, ஆதிமூலம் தாவா சொத்தின் ஒரு பகுதியை கிரையம் கொடுத்துள்ளனர் என்றால் சரியல்ல. எனது தந்தை 05.05.1947 ல் பொன்னுசாமி படையாச்சி மகன்கள் பூராசாமி, ஆதிமூலம் ஆகியோர்களிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அந்த 05.05.1947 ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தில் முதல் அயிட்ட சொத்தாக கீழமேல் காலடி 25, தென்வடல் காலடி 72 என்று கண்டு கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான், அதே ஆவணத்தின் புழக்கடை தோட்டம் கிழமேல் 25 காலடி, தென்வடல் 42 காலடி என்று கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் கண்ட கிழமேல் 25 காலடி மட்டும் தான் ஆவணப்படி சொந்தம் என்றால் சரியல்ல, மேல்புறம் தோட்டமும் எனக்கு சொந்தம். 1ம் பிரதிவாதியின் தந்தை பெயர் அப்பாசாமி என்றால் சரிதான். கடந்த 05.05.1947 ம் தேதிய ஆவணத்தின் மேல்புற எல்லையாக அப்பாசாமி இடம் காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த கீழமேல் 25 காலடி பகுதி முழுவதும் எங்கள் அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான், அந்த 25 காலடி சொத்திற்கு மேல்புறம் தான் நான் பாதை கேட்டு வழக்கு தொடர்ந்துள்ளேன் என்றால் சரிதான். எனது பெரியப்பா சாமிகண்ணு 12.01.1945 ம் தேதியில் பெற்ற கிரைய ஆவணத்திலும் கிழமேல் 25 காலடி என கண்டு கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கீழ்புறம் எனது வீட்டு சுவர் உள்ளது, அந்த சுவற்றில் தான் குழாய் பதித்து எங்கள் வடபுற தோட்டப்பகுதி தண்ணீர் செல்கிறதா என்றால் இல்லை, சுவற்றுக்கு

மேல்புறம் தரையில் தான் குழாய் பதித்து தண்ணீர் செல்கிறது. நான் நீதிமன்ற ஆணையர் மனு தாக்கல் செய்தேனா என்றால் சரிதான், அந்த மனு தள்ளுபடியாகி விட்டது என்றால் சொத்தை பார்வையிட யாரும் வரவில்லை. தாவா சொத்தில் எனக்கு பாத்தியம் உள்ளதா என்பதை நிரூபிக்க ஆணையர் அறிக்கை அவசியம் என்றால் சரியல்ல. ஆணையர் பார்வையிட்டால் தாவா சொத்தில் எனக்கு பாத்தியம் இல்லை என்று தெரிந்துவிடும் என்பதால் தள்ளுபடியான ஆணையர் மனுவிற்கு எந்த நடவடிக்கையும் நான் எடுக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. எனது இடத்திற்கு தென்புறம் கொடுக்கூர் தார்சாலை உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கீழ்புற சொத்துக்கள் முழுவதும் தற்போது எனது அனுபவத்தில் தான் இருக்கிறது என்றால் சரிதான். எங்கள் சொத்துக்கு ஏற்கனவே ஏற்பட்ட முன்கிரைய ஆவணங்களில் கிழமேல் 25 காலடி அளவுகளுக்குள் பின்புற தோட்ட புழக்கமும் கண்டு ஆவணம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு தாவா சொத்திற்கு மேல்புறம் 4 பாகம் ஒதுக்கப்பட்டு, அவைகளுக்கு தனியாக உட்பிரிவு ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 4 பாகஸ்தர்களுக்கும் போக வர பாதைக்காக தாவா சொத்து ஒதுக்கி அதன்படி தாவா சொத்து வருவாய் ஆவணத்தில் தனிஉட்பிரிவு ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1954 ல் பிரதிவாதிகளுக்குள் ஏற்பட்ட கிரைய பத்திரத்தில் தாவா சொத்தும் சேர்ந்து கிரையம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் எந்த காலத்திலும் பாதையாக பயன்படுத்தியது இல்லை என்றால் சரியல்ல. எனது மேல்புற சுவற்றில் தண்ணீர் குழாய் அமைக்க அனுமதி கேட்டு தாவா சொத்தில் நான் எந்த உரிமையும் கோரமாட்டேன் என்று முச்சலிக்கை ஆவணம் ஏற்படுத்தி கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் தண்ணீர் குழாய் ஏதும் பதிக்கவில்லை என்றாலும், பதித்ததாக நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. கடந்த 29.10.2008 ம் தேதியில் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தை நான் எழுதிக்கொடுத்துள்ளேனா என்றால் இல்லை, அந்த ஆவணத்தில் சாட்சிகளாக பழனிமுத்து, ராமசாமி, கலியபெருமாள், ஜெகநாதன், பட்டுசாமி, பாலையா, சின்னதுரை ஆகியோர்கள் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்களா என்றால் இல்லை, அந்த ஆவணத்தை எழுதியவர் ரெங்கராசன் என்றால் சரியல்ல.

நான் தாவா சொத்தில் உரிமை ஏற்படுத்த வேண்டு என்ற எண்ணத்தில் தான் கடந்த 13.11.2008 மற்றும் 30.10.2008 ஆகிய தேதிகளில் ஏற்பட்ட வா.சா.ஆ.4, 5 ஆவணங்களில் தாவா சொத்தை பொதுப் பாதை என கண்டு ஆவணம் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல, வா.சா.ஆ.4, 5 ஆவணம் எழுதப்பட்ட பிறகு தான் தாவா சொத்தில் பிரச்சனை ஏற்பட்டு முச்சலிக்கை எழுதப்பட்டது என்றால் சரியல்ல, பிரதிவாதிகள் தரப்பில் வீடுகட்ட முயற்சித்தபோது தான் பிரச்சனை ஏற்பட்டது. பிரதிவாதிகள் தற்போது வீடுகட்டியுள்ளனர், அந்த வீடு தாவா சொத்தான பாதையும் சேர்த்து கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆணையர் மனுவின் அடிப்படையில் தான் பிரதிவாதிகள் எதிர்வழக்குரையுடன் எதிர்கட்டு கோரிக்கையும் கேட்டு தாக்கல் செய்துள்ளார்கள் என்றாலும் பிரதிவாதிகளின் அனுபவம் தெரிந்துவிடும் என்பதால் தான் ஆணையர் மனு மீது எந்த மேல்நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஆணையர் அறிக்கை இல்லாமல் எதிர்கட்டு கோரிக்கை நிரூபணம் செய்ய முடியாது என்பதால் பிரதிவாதிகள் தங்கள் எதிர்கட்டு கோரிக்கையை திரும்ப பெற்றுக்கொண்டனர் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/ஆ.சதாசிவம்/

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.